மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 05 புதன்கிழமை 20.11.2024 கதிர் 423




# உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் விசாரணையில் பிள்ளையான் வாக்குமூலம்

## குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையானார்



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்காக இன்று காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகிய பிள்ளையான் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் வாக்குமூலம் அளித்து விட்டு அங்கிருந்து வெளியேறிச் சென்றுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது 2➤



## முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பதுளை நீதிமன்றால் பிணையில் விடுவிப்பு

தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இன்று காலை கைதுசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பதுளை நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். 2➤

## பாரிய ஊழல்கள் தொடர்பாக விசாரணை! அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்



தேசிய வேலைத்திட்டத்தை வலுப்படுத்துவதற்கு அரச ஊழியர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று துறைமுகங்கள் 2➤

## 7 கோடி ரூபா கொள்ளைச் சம்பவம் சந்தேக நபர் கம்பஹாவில் கைது!

பணத்தை பாதுகாப்பாகக் கொண்டு செல்லும்தனியார்நிறுவனமொன்றின்சாரதி ஒருவர் 7 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மினுவாங்கொடையில்வைத்து கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தம்மிட்ட மாகவிட பிரதேசத்தை சேர்ந்த 35 வயதுயை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் மினுவாங்கொட பொலிஸாரும் இணைந்து நேற்று கம்பஹா கடுவங்கஹா பகுதியில் வைத்து குறித்த சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட போது, அவரிடம் இருந்து 5 கிராம் 420 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட நிலையில், கொள்ளையிடப்பட்ட பணத்தில் இருந்து 31,515,291 ஷரூபா தொகை மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணத்தைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்லும் தனியார் நிறுவனமொன்றின் நான்கு பேர் கொண்ட அதிகாரிகள் குழுவொன்று நேற்றுக் காலை பணப்பைகளுடன் வானில் மினுவாங்கொடையில் உள்ள தனியார் வங்கிக்கு சென்றுள்ளனர்.

வங்கிக்கு அருகில் வந்த பிறகு, சாரதி மட்டும் வானில் இருந்த நிலையில் ஏனையவர்கள் வாகனத்தில் இருந்து இறங்கிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அப்போது குறித்த வாகனத்தில் 7 கோடியே 13 இலட்சத்து 27 ஆயிரத்து 296 ரூபா பணம் இருந்துள்ளது. குறித்த பணத்துடன் சாரதி வாகனத்தைக் கடத்திச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் அவர் கம்பஹா உக்கல்கொட பிரதேசத்தில் வாகனத்தைக் கைவிட்டு, மோட்டார் சைக்கிளில் மற்றுமொரு நபருடன் தப்பிச் சென்றது அங்கிருந்த சிசிரீவி கமராவில் பதிவாகியிருந்தது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பத்தாவது நாடாளுமன்றின் முதல் கூட்டம் நாளை உறுப்பினர்களுக்கு நடைமுறை அறிவுறுத்தல்கள்

நாளை 21ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள பத்தாவது நாடாமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் பங்குபற்றவிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் காலை 9 மணிக்கு நாடாளுமன்ற வளாகத்திற்கு வருகைதருமாறு மன்றின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்திற்கு வரும்போது உறுப்பினர்களின் வாகனங்கள் பொலிசாரால் அவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிறுத்தலிடங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுப்பினர்களுக்கான கூடங்களில் நுழைந்து, அழைப்பு மணியோசை அடிக்கும்வரை அங்கு தங்கியிருத்தல் வேண்டும் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது. 2➤

## மாணவர்களின் மத்தியில் நம்பகத்தன்மையை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்!

### பிரதமர் ஹரிணி அமரசூரிய உறுதியளித்தார்



அடுத்த மறுமலர்ச்சி யுகத்திற்கு ஏற்ற பிரசைகளை உருவாக்கக்கூடிய மன அழுத்தமில்லாத கல்விக்காக, மாணவர்களின் மத்தியில் நம்பகத்தன்மையை நிலை நாட்ட அர்ப்பணிப்புடன 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## உயிர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான சர்ச்சைக்குரிய வீடியோவை பிரித்தானியாவின் சனல்-4 கடந்த ஆண்டு ஜூன் 8ஆம் திகதி ஒளி பரப்பியிருந்தது.

சுமார் 50 நிமிடங்கள் ஒளிபரப்பான குறித்த காணொளியில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் அணியின் ஊடகப் பேச்சாளரும் தற்போது சுவிட்சர்லாந்தில் தங்கியுள்ளவருமான அசாத் மௌலானா தோன்றியிருந்தார். அவர் அதில் குறிப்பிட்ட விடயங்களில் பிள்ளையானையும் தொடர்புபடுத்தியிருந்தார்

சம்பந்தப்பட்ட காணொளியின் உள்ளடக்கம் குறித்து ஆராயுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு முறைப்பாடு கிடைத்ததையடுத்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்திருந்தது.

இதன்படி, குறித்த விசாரணை தொடர்பான வாக்குமூலங்களைப் பெறுவதற்காக முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் கடந்த 12ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

ஆயினும், அன்றைய தினம் முன்னாள் இராஜாங்க அமைச்சர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகாத நிலையில், வாக்குமூலத்தை வழங்குவதற்கு சட்டத்தரணிகள் ஊடாக வேறு திகதியை அவர் கோரியிருந்தார்.

அதன்படி இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டு இன்று காலை 9.30 மணியளவில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதுளை நீதவான் நீதிமன்றில் இன்று அவர் முன்னிலைப் படுத்தப்பட்டபோது தலா 5 இலட்சம் ஷரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த 11ஆம் திகதி பதுளையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தின்போது பொலிஸாருடன் இடம்பெற்ற முறுகல்நிலை தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக ஹரின் பெர்னாண்டோ இன்று காலை பதுளை பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகியிருந்த நிலையில் அங்குவைத்து அவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சில் தனது கடமைகளைப் பொறுப்பேற்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தனது அதிகாரத்தின் கீழ் வந்துள்ள அமைச்சுக்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பாரிய ஊழல்கள் தொடர்பாக விசாரணை செய்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதியளித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சரவையில் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் இல்லாமை தொடர்பில் எழுந்துள்ள விமர்சனங்களுக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்க விளக்கம் அளித்துள்ளார்.

தமது அரசாங்கம் இலங்கையர்களை உள்ளடக்கிய ஒரு அரசாங்கம் என்றும் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற இன, மத ரீதியான அடையாளங்களை அது கொண்டிருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

76 ஆண்டுகளில் அனைத்து சமூகங்களும் தங்களது மத, கலாசார வேறுபாடுகளை மறந்து ஒரே நாடாக வாக்களித்து, பெரும்பான்மை ஆட்சியைத் தேர்ந்தெடுப்பது இதுவே முதல் முறை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய மக்கள் அரசாங்கம் எந்தவொரு சமூகத்தையும் அவர்களின் மத அல்லது கலாசார நடைமுறைகளின் அடிப்படையில் ஒருபோதும் பாகுபாடு காட்டாது. அரசாங்கத்தின் கொள்கையில் அது இல்லையெனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து இன மக்களாலும் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே எமது கட்சியில் உள்ளனர். இங்கு பாரபட்சம் காட்டுவதற்கு எதுவும் இல்லை. மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தே அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## பத்தாவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துணைவி அல்லது துணைவரோடு வருகின்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் நுழைவாயில் அருகில் வாகனங்களிலிருந்து இறங்க வேண்டும் எனவும் ஏனைய அனைத்து உறுப்பினர்களும் உறுப்பினர்களுக்குரிய நுழைவாயிலின் அருகில் இறங்க வேண்டும் என்றும் அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மாணவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயற்படவுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சில் தனது அமைச்சுப் பதவியை இன்று பொறுப்பேற்றுக்கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.


அங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர், கல்வி போன்றதொரு விடயத்துடன் தொடர்புடைய அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார். விடயத்தின் ஆழத்தை தான் முழுமையாக புரிந்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசின் கொள்கைகளின்படி, கல்விக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டு, பாடசாலைக் கல்வியானது முறையாகவும் கால ஒழுங்கிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், குழந்தைகள் மகிழ்ச்சியுடன் கல்வி கற்கும் சூழல் உருவாக்கப்பட்டு, தற்போது கல்வித்துறையில் நிலவும் பிரச்சனைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், மக்கள் அனைவரினதும் கணிசமான ஆதரவு அதற்கு அவசியம் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளராக கே.எம். ஜி.எஸ்.என். களுவெவவும் இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

## வடக்கு மக்களுக்கு 12 மில்லியன் நிதியுதவி ஆளுநரிடம் கையளித்தார் சீனத் தூதுவர்




வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவும் வகையில், சீன அரசாங்கத்தால் 12 மில்லியன் ஷரூபா பெறுமதியான காசோலையை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனிடம் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் இன்று கையளித்தார்.

வடக்கு மாகாண ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் இன்று காலை இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தலைமையிலான குழுவினர் சந்தித்தனர். இதன்போதே அவர் இந்தக் காசோலையைக் கையளித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட நாகலிங்கம் வேதநாயகனுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்த இலங்கைக்கான சீனத்தூதுவர், இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு தமது பங்களிப்பு இருக்கும் என்று உறுதியளித்தார்.

வடபகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அவதானிக்கையில் மகிழ்ச்சியாக இருப்பதாக சீனத் தூதுவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கான சீனத்தூதுவரை வரவேற்ற வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணத்தில் ஊழல் ஒழிப்பு, அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டினார்.

வடபகுதி விவசாயிகளின் நீண்ட காலப் பிரச்சினையாக அவர்களின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குரிய வாய்ப்புக்கள் குறைவாக உள்ளமையை ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

மேலும், வடக்கு மாகாணத்தின் மற்றொரு முக்கிய வளமான மீன்பிடி மூலமாக பிடிக்கப்படும் மீன்கள் அப்படியே ஏற்றுமதி செய்யப்படுகின்றன எனவும் அவை உற்பத்திப் பொருள்களாக ஏற்றுமதி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்துக்கு சீன அரசாங்கம் தொடர்ச்சியாக உதவிகளைச் செய்யும் என்பதைக் குறிப்பிட்ட சீனத் தூதுவர், சீனாவில் 800 மில்லியன் மக்களின் வறுமையை கடந்த தசாப்த காலத்தில் இல்லாதொழித்ததாகவும் அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநருடன் ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலனும் பங்கேற்றார்.

## முன்னாள் ஜனாதிபதி ரணில் நாளை இந்தியா பயணம்!

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை இந்தியாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

மத்திய இந்தியாவின் இந்தூரில் உள்ள ஸ்ரீ சத்ய ஸ்ரீ வித்யா விஹார் உயர்கல்வி நிறுவனத்தில் விரிவுரை ஒன்றை ஆற்றுவதற்காக அவர் அங்கு செல்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விரிவுரை நாளை மறுதினம் 22 ஆம் திகதி மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. தனது இந்தியப் பயணத்தை நிறைவுசெய்துகொண்டு எதிர்வரும் 30ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பவுள்ளதாகத் தெரியவருகிறது.




# முன்னாள் அமைச்சர் அதிரடியாக கைது





கொழும்பு, நவ. 20

முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவை சற்று நேரத்திற்கு முன்னர் பதுளை பொலிஸார் கைது செய்தனர். அமைதி தேர்தல் காலத்தில் பதுளை நகரில் இடம்பெற்ற சட்டவிரோத பேரணி தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி முன்னாள் அமைச்சர் ஆதரவாளர்கள் குழுவுடன் இணைந்து துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து பட்டாசு கொளுத்திக் கொண்டிருந்த வேளையில் பதுளை பொலிஸார் அவர்களை அங்கிருந்து கலைத்துள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு இடையில் இடம்பெற்ற உரையாடல் காரணமாக அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது.

இதன்போது முன்னாள் அமைச்சர், தான் அணிந்திருந்த ஆடையை கழட்டிவிட்டு குழப்பம் ஏற்படுத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஹரின் பெர்னாண்டோவிடம் தற்போது வாக்குமூலம் பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர் .(ஐ)

# எதிர்க்கட்சித் தலைவராக ரணில் கேள்விக்குறியாகியுள்ள சஜித்தின் பதவி




கொழும்பு, நவ. 20

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கபுதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியலில் இருந்து நாடாளுமன்றத்திற்கு பிரவேசித்து எதிர்க்கட் சித் தலைவராக பதவியேறகவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

அதற்கு ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பல எம்.பி.க்கள் ஆதரவளிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

சஜித் பிரேமதாசவுடன் இணைந்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு குறிப பிடத்தக்க சித்தாந்த சவாலை முன்வைக்க முடியாது என அந்த எம்.பி.க்கள் குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் அபிப்பிராயப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அந்த நிலைமையின் அடிப்படையில் அவர்களில் ஒரு குழு ரணில் விக்ரமசிங்கவின் எதிர்க்கட்சித் தலைமையின் கீழ் செயற்பட தீர்மானித்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

புதியஜனநாயகமுன்னணியின் தேசியப்பட்டியலுக்கு நியமிக்கப்பட்ட எம்.பி ஒருவர் பதவி விலகி, அந்த வெற்றிடத்திற்காக நாடாளுமன்றத்திற்குள் நுழையும் வாய்ப்பு ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது (ஐ)




# மிதி வெடி

பட்டாசுக் கடைக்காரருக்கும், பக்கத்து வீட்டுக்காரருக்கும் இருக்கிற பஞ்சாயத்து இருக்குதே கடுமையாத் தான் போகுதாம் பாருங்கோ...

எப்பாலும் இருந்துட்டு வடக்கை எட்டிப்பாத்து விசிட் அடிக்கிற "வெடி"க் கடைக்காரர் தாங்கள் நினைக்கிற மாதிரி எல்லாரும் இருக்க வேணும் எண்டு எதிர்பார்க்கினம் போல..?

அது எப்பிடி முடியும்? இங்கயே வந்திருந்நு "காம்ப்" அடிச்சு காரியாலயம் திறந்து வைச்சுக் கொண்டிருக்கிற பக்கத்து வீட்டுக்காரரை விட்டுட்டு எப்பிடி இங்கத்தை ஆக்கள் அங்கத்தயாரோட சேர்ந்து ஓடுவினம்? இது தானுங்கோ இப்ப பிரச்சினை.

"வெடி" நாட்டுக்கார தூதுவர் நேற்று யாழ்ப்பாணம் வந்தவரெல்லே? இண்டைக்கும் நிண்டு சுத்தியடிச்சுப் போட்டு நாளைக்குத் தான் கிழக்குப் பக்கமாப் போகப் போகினம் போல.... அவை வந்து அங்க இங்கயெல்லாம் எண்டு திரிஞ்சு போட்டு பின்னேரக்கையாப் பாத்து எங்கட இடத்துக்கும் வந்திருக்கினம்....

எங்கட இடமெண்டா எது எண்டு தானே மண்டையப் போட்டுக் குழப்பிறியள்? அதான் "பிரஸ் கிளப்".

போன "எலக்ச" னோட "பிரஸ் கிளப்" "பேஃமஸ்" ஆகிட்டு... யாரெண்டாலும் வாங்கோ, அரசியல் நடத்திட்டுப் போங்கோ எண்டுமாப் போல எல்லாரும் "பிரஸ் கிளப்"ல தான் தங்கட பஞ்சா யத்தை செய்யிறவை. அது மாதிரி ஒரு பஞ்சாயத்துத் தான் நேற்றும் நடந்திருக்கு....

கன காலமா யாழ்ப்பாணத்துக்க தாங்கள் வந்துட்டுப் போறதைப் பிரபலப்படுத்தேலாமல் நிண்ட "வெடி" நாட்டுக் காரருக்கு திடீரெண்டு ஒரு பத்திரிகைக்காரத் தம்பியின்ர தொடர்பு கிடைச்சிருக்கு... அவருக்கு ஆர் எவரெண்டு இல்ல... தாறதத் தந்தால் தலை கீழாயும் நிப்பன் எண்டு தம்பி வஞ்சகமில்லாமல் எல்லாருக்கும் வேலை செய்யுறவராம்....

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்யேக்க பத்திரிகைக்கெண்டு எடுத்த படத்தை, புலனா(நா)ய்வாளர்களுக்கும் அனுப்பிப் போட்டு, அதையே பேப்பரிலயும் போட்டு பிரபலம் தேடின ஆள் அவர். அவரைப் பாவிக்கிற யாருக்கும் அவற்றை குணம் தெரியாமல் இல்லையாம்... ஆனாலும், அந்தப் பெடியைப் போல எல்லாம் தாறதுக்கு வேற ஆக்கள் இல்லாததால... "டபிள்", "ட்ரிபிள்", "குவாட்ரபிள்", "குயின்ரிபுள்".... எண்டு ஆரேமு "ஏஜென்ஸி"காரருக்கு ஒரே நேரத்தில வேலை செய்யுறவரைத்தான் இவையும் பிடிச்சிருக்கினம்....

"பிரஸ் மீற்"க்கு ஒரு ரேட், "டினர்"க்கு ஒரு ரேட் எண்டு தம்பி நல்ல வடிவாப் பணம் பண்ணியிருக்குது. போதாக்குறைக்கு இன்னும் ரெண்டு, மூண்டு பேரை ஆள் பிடிச்சும் குடுத்திருக்குதாம்.... அவையளுக்கும், ஆளாளுக்கு என்னென்ன "ஓஃபர்" எண்டு தனித் தனியாக் கதைச்சிருக்கினம்....

தங்கட நாட்டுக் காரரால உங்கத்தப் "பெரிய" பள்ளிக் கூடத்துக்குள்ள போக முடியாமல் கிடக்கெண்டு "பப்ளிக்"ல ஒப்புவிச்சதுமில்லாமல்... நேற்றைக்குப் புதுசாச் சேர்த்த "ஏஜெண்ட்" மாருக்கும் அதையொரு "அசைன்மென்ற்" றா குடுத்துட்டுப் போயிருக்கினமாம்....

ஏற்கனவே தங்கட நாட்டுத் தூதுவர்மார் வரச் சொன்னால் வந்து சந்திக்கினம் இல்லை, "வெடி"நாட்டுத் தூதுவர் நிதியத்தை வாங்கிப் போட்டினம் எண்டு அவையளைப் "பக்கத்து" நாட்டுக்காரருக்குப் போட்டுக்குடுத்தவர் தானாம், "வெடி"ட்டுக் காரரிட்டை காசை வாங்காதேங்கோ எண்டு மாணவர் பக்கத்தில நிண்டு அறிக்கை விடவும் வச்சவராம்....

அப்பப் பாருங்களன்? ...... ரெண்டு நாடும் தங்கட பஞ்சாயத்தில பிடுங்குப்பட, மற்றப் பக்கத்தால "எரியுற வீட்டில புடுங்கினது மிச்சம்" எண்டு யார் தந்தாலும் எங்களுக்குக் காசும், இன்ன பிற விசியங்களும் வந்தால் போதும் எண்டுற ஆக்களும் இருக்கினம் தானே?

கொடுத்தவன் விழிப்பான் எடுத்தவன் முடிப்பான்
அடுத்தவன் பார்த்தால் சிரிப்பானே
சிரித்தவன் அழுவதும் அழுதவன் சிரிபபதும்
பணத்தால் வந்த நிலை தானே....

–நரமுனி–

# காலத்தின் கோலங்கள்

காலத்தின் கோலங்களை யார் அறிவார்? முற்றும் தெரிந்த முனிவர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் அல்லது அழைக்கப்படுபவர்கள் (அப்படி எவராவது இருந்தால்) அறிவார்களா? யார் அந்த முற்றும் துறந்த தெரிந்த முனிவர்கள்? 'நான் எல்லாவற்றையும் அறிவேன். நான் பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பாற்பட்டவன். நான்தான் இந்த பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கு காரணம். என்னை எவன் ஒருவன் சரணடைகிறானோ அவனை நான் கைவிடமாட்டேன். என்னையே நினைத்து பக்தி செய்திடில் நான் நான் உங்களுக்கு மோட்சத்தை வழங்குவேன்" என்று கிருஷ்ணர் பகவத்கீதையில் கூறுவதாக வியாசர் எழுதிய மகாபாரதம் எனும் இதிகாசம் சுட்டிக்காட்டுகிறது.

இதை குறிப்பிடுகையில் இந்த ஒரு விஷயத்தையும் கூறியாகவேண்டும். மகாபாரதம் மற்றும் ராமாயணம் உண்மையிலேயே நடந்த நிகழ்வுகளா என்னும் ஒரு விவாதம் இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. இன்றைய அளவில் மக்களின் நம்பிக்கையை மட்டும் பொறுத்துதான் இவை உண்மை சம்பவங்களா அல்லது வேதவியாசரின் கற்பனையில் விளைந்த தோத்திரங்களா என்பது நோக்கப்படுகிறது.



நான் எனது முந்தைய பல கட்டுரைகளில்




குறிப்பிட்டதையே மீண்டும் இங்கு கூற விழைகிறேன். இதுவரையில் உலகில் தோன்றிய கடவுளின் அவதாரங்கள் என்று கூறப்படுபவர்கள் எவரும் கடவுள் என்று நம்பப்படும், கருதப்படும், போற்றப்படும் மாபெரும் பிரபஞ்ச சக்தி இல்லை. அப்படி தோன்றிய அனைத்து மானிடர்களும் ஏதாவது ஒரு அரிய சக்தியையோ அல்லது வரத்தையோ பெற்றிருந்தார்கள். அவ்வளவே தவிர அவர்கள் கடவுளின் சக்திகளை நூற்றுக்கு நூறு பெற்றவர்கள் இல்லை. எவர் ஒருவர் இத்தகைய பூரண சக்திகளை பெறவில்லையோ அவர்கள் முதற்கடவுளாக இருக்கமுடியாது. இதை சாதாரண மக்கள் கூட புரிந்துகொள்ள முடியும்.

இன்றைய உலகத்தில் எவ்வளவு பேர்களை பார்க்கிறோம். ஏதேதோ விந்தைகள் மற்றும் சாகசங்கள் புரிகிறார்கள். ரஷிய மனிதன் விண்வெளியில் பறந்தான், எல்லோராலும் பறக்கமுடியுமா? அமெரிக்காவின் ஆர்ம்ஸ்ட்ராங் சந்திரனில் காலடி வைத்தார். எவ்வளவு பேர் இன்று சந்திரனுக்குப்பயணம் செய்ய தைரியமாக இருப்பார்கள்? நாலாயிரம் ஐந்தாயிரம் அடி உயரத்திலிருந்து பாராச்சூட் இல்லாமல் கீழே குதிப்பவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஏன், சர்க்கஸ ிலும், கண்காட்சிகளிலும் ஒரு சிறிய கூண்டிற்குள் நூ ற்றிஐம்பது இருநூறு கிமீ வேகத்தில் பைக் விடுபவர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள். இவ்வளவு ஏன், முப்பது நாற்பது அடிக்கு மேல், கயிற்றில் கட்டையும் கயிறும் இல்லாமல் நடப்பவர்கள் இருக்கிறார்கள்தானே? இவர்களைப்போல் நம்மில் எவ்வளவு பேர்கள் இந்த காரியத்தை செய்யமுடியும். இருப்பது முப்பது அடுக்குகள் கொண்ட பலஅடுக்கு மொட்டை மாடியிலிருந்து இருபது முப்பது அடிகள் தூரத்தில் இருக்கும் இன்னொரு பலஅடுக்குக்கு மாடியின் மொட்டை மாடிக்கு, எந்தவித துணையும் கருவியும் இன்றி, தன் உயிரை பணயம் வைத்து தாண்டுபவர்கள் சிலரும் இருக்கின்றார்கள்தானே? இப்படிப்பட்ட மயிர்கூச்செரியவைக்கும் சாகசங்களை செய்யும் சிலர் இத்தகைய செயல்களை செய்கையில் விபத்துக்குள்ளாகி இறந்து விடுவதையும் பார்க்கிறோம்.

மனிதனாகப்பிறந்தவன் இறந்துதான் ஆகவேண்டும். இப்போது வரை இதுதான் பிரபஞ்சத்தின் நியதி. அந்த வகையில் நோக்குகையில் உலகில் இதுவரை பிறந்த அல்லது அவதரித்த எல்லா மானிடர்களும், அவர்கள் எத்தகைய பிரசித்தி பெற்ற மனிதர்கள் ஆயினும் சரி, அல்லது அரிய உடல் சக்தி மற்றும் தெய்வீக சக்தி பொருந்தியவர்களாயினும் சரி, அவர்களும் மற்ற மனிதர்களைப்போலத்தான் மரித்துப்போனார்கள். யேசுவாக இருக்கட்டும், ராமனாக இருக்கட்டும் அல்லது கிருஷ்ணனாக இருக்கட்டும். இப்படியாக பிறந்து இறப்பவர்கள் எவ்வாறு கடவுளாக இருக்கமுடியும்? பிறப்பும் இறப்பும் அற்றவர் தான் கடவுள் என்றால், உலகில் இதுவரை பிறந்த எந்த ஒரு மனிதனையும் கடவுள் என்று எப்படி ஒப்புக்கொள்வது?

ஒரு வேளை அவர்கள் கடவுளின் உண்மையான பிரதிநிதிகள் என்றால், இன்று உலகம் இத்தகைய வருத்தத்திற்குரிய ஒரு சூழ்நிலையில் இருக்குமா? ஒரு பக்கம் லட்சக்கணக்கில் மக்கள் தெருக்கோடிகளில் உணவுக்காக இரந்துகொண்டும், உணவின்றி இறந்துகொண்டும் இருக்கையில், இன்னொரு புறம் சில லட்சக்கணக்கான மக்கள் மட்டும் பல கோடிகளுக்கு அதிபதிகளாக இருக்கும் ஏற்றத்தாழ்வுகள் நிலைதான் உலகில் ஏற்பட்டிருக்குமா? கடவுள் நல்லவர்களை காப்பாற்றுவார் என்றால் எவ்வளவு நல்லவர்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். கடவுள் தீயவைகளை அழிப்பவர் என்றால் உலகில் உள்ள எத்தனையோ லட்சக்கணக்கான ( கோடிக்கணக்கிலும் இருக்கலாம்) தீயவர்கள் எல்லோரும் எப்போதோ இறந்திருக்கவேண்டும் அல்லது அவர்கள் உடனுக்குடன் தண்டிக்கப்பட்டிருக்கவேண்டும் அல்லது தண்டிக்கப்படவேண்டும். இவை எதுவும் இவ்வுலகில் நடப்பதில்லை.

இப்படி இருக்கையில், நாம் சிலரை கடவுள் என்று சொல்லி வழிபடுவது எதற்காக? எல்லாம் ஒரு மன திருப்திக்காக, அல்லது மன ஆறுதலுக்காக. தவிர, மரணம் என்னும் பயத்தினாலும் தான்? இன்னுமொரு பகுத்தறிவு காரணம், ஒரு ஒழுக்கமுறையில் இந்த மாபெரும் இயற்கை இயங்கிவருவதற்கு நிச்சயமாக ஒரு மூல காரணம் இருக்கும். இதை ஒருவர் கடவுள் என்கிறார், இன்னொருவர் இயற்கை என்கிறார், மேலுமொருவர் மாயை என்கிறார். ஆக, ஏதோ ஒன்று நாம் இவ்வுலகில் பிறந்து உயிர்வாழ மூல காரணமாக இருக்கிறது.

இந்த காரணங்களை வைத்து பார்க்கையில், ஒவ்வொரு மனிதனுக்கும் நடக்கும் வாழ்க்கை நிகழ்வுகள் அவர்களின் கடந்த மற்றும் நிகழ் கால வினைப்பயன்கள் காரணங்களினால்தான் என்னும் கருத்தை நம்மால் ஒருஅளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும். ஏனென்றால், நமக்கு நிகழும் அனுபவங்கள், குறிப்பாக துயரங்கள், துன்பங்கள் மற்றும் வேதனைகள் நாம் இப்பிறப்பில் செய்த பாவச்செயல்களை விட பலமடங்கு அதிகமாக ஏன் தாக்க வேண்டும்? இப்படிப்பட்ட வாழ்க்கை நிகழ்வுகள் உங்களில் பலபேருக்கு நிகழ்ந்திருக்கும் அல்லது நிகழ்ந்துகொண்டிருக்கக்கூடும்.

ஒரு சிலருக்கு மட்டும் வாழ்வு பலருக்கு தாழ்வு என்னும் கோட்பாட்டை என்னால் உண்மையில் ஜீரணிக்கமுடியவில்லை. இப்பிறவியில் செய்யாத குற்றத்திற்காக, எவ்வளவோ கொடுமைகளையும் சோதனைகளையும் ஒருவர் அனுபவிக்கிறார் என்பதை காணுகையில், இந்த உலகம் மிகவும் பொல்லாத, நன்றிகெட்ட உலகம் என்றுதானே பலரின் மனதிலும் தோன்றும். அப்படிப்பட்ட எண்ணங்கள் தோன்றினாலும், நடப்பவை எல்லாம் நன்மைக்கே என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் பரிதாபமான நிலையில்தான் பலர் வாழ்ந்து வருகின்றனர்.

நான் இதுவரை வாழ்க்கையில் பணம் மற்றும் பொருள் பிச்சை எடுத்ததில்லை. லஞ்சம் வாங்குவது மிகவும் கேவலமான பணம் வாங்கும் பிச்சை. பசியின் கொடுமையை தீர்த்துக்கொள்ளவே எனும்போது, பிச்சை எடுப்பது பாவச்செயலாக இருக்கமுடியாது. ஆனால் லஞ்சம் எனும் பிச்சை வாங்குவது நிச்சயமாக ஒரு பாவச்செயல் இன்றி வேறு எதுவும் இருக்கமுடியாது. அந்த வகையில் நான் எந்த ஒரு பிச்சையும் இதுவரை எடுக்கவில்லை. என் கர்மவினைகள் என்னை பாதுகாத்து வந்திருக்கின்றன என்றும் கூட சொல்லலாம். ஆயினும், எனது உடல் மற்றும் மன நலனுக்காகவும் நிம்மதிக்காகவும், ஏன் நல்ல தூக்கம் வரவேண்டியும் பல முறை, கண்ணிற்கு தெரியாத கடவுளிடம் பிச்சை கேட்டிருக்கிறேன்.

அவ்வப்போது எனக்குள் தோன்றும் "நாமும் பிரபஞ்சத்தின் ஒரு சிறிய கூறுதானே (எவ்வளவு சிறிதாக



இருப்பினும்), அப்படி இருக்கையில் நாமும் அந்த பிரபஞ்ச சக்தியின் ஒரு அங்கம்தானே, பின் ஏன், நாம் அந்த கடவுள் எனக்கருதப்படும் பிரபஞ்ச சக்தியிடம் பிச்சை கேட்கவேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் நான் பிரபஞ்சத்தின் ஒரு அங்கம் எனும்போது, நான் பிரபஞ்சம் எனப்படும் குடும்பத்தில் ஒரு அங்கமே. அப்படியாயின், ஒரே குடும்பத்தில் இருந்துகொண்டு அந்த குடும்பத்தின் தந்தைபோன்ற தலைவரை அணுகி பிச்சை கேட்கும் செயல் கொஞ்சம் விந்தையாகவே தெரிகிறது. நாம் நம் தாயிடம் 'அம்மா தாயே சோறு போடு என்று பிச்சை கேட்டோமா?' அப்பாவிடம் 'ஐயா சாமி எனக்கு பத்து ஷரூபாய் கைச்செலவுக்கு கொடுங்கள் ' என்று பிச்சை கேட்டோமா? இந்த கோணத்தில் பார்த்தால், நாம் கடவுளிடம் கோரிக்கைகள் வைப்பதும் நம் தந்தை தாயிடம் பிச்சை கேட்பதைப்போலத்தான் இருக்கிறது.

கண்ணுக்குத்தெரியாத அந்த மாபெரும் சக்திக்கு நாம் எப்படி வாழ்கிறோம் என்பதும் நிச்சயமாக தெரிந்திருக்கவேண்டும். அப்படி என்றால், நாம் சுகப்படுவதையும் துன்பப்படுவதையும் இந்த பிரபஞ்சம் எனும் கடவுள் சதா சர்வ காலமும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறது. இப்படியாக நோக்குகையில், நாம் எவரிடத்திலும் பிச்சை ஏந்துதல் கூடாது, கடவுளிடத்திலும் தான். படைத்தவன்தானே நம்மை காப்பாற்றவேண்டும்?

எப்படி இருக்கிறது நிலை, பார்த்தீர்களா? கர்மா வினைகள் என்ற பெயரில் நழுவிக்கொண்டு, கடவுளும் நம்மை கண்டுகொள்வதில்லை என்பதுபோலத்தான் எனக்குத்தோன்றுகிறது. உண்ண உணவு, உடுக்க உடை, உறைய உறைவிடம் இந்த மூன்றும் அடையப்பெற்ற எனது மன நிலையே இப்படி எனில், இவை எதுவுமே இல்லாத எவ்வளவு கோடி மக்கள் அவர்களது சகோதர சகோதரிகளிடம் (நம்மிடம்தான்) " ஒரு பிடி சோறு கொடுங்கம்மா. பசி உயிர் போகுது. ஒரு ஷரூபாய் காசு கொடுங்கையா. வாழ வழியில்லாமல் இருக்கிறேன்" என்று அன்றாடம் பிச்சை கேட்டு உயிர் பிழைக்கும் கேவலமான நிலையைத்தான் என்ன சொல்ல?

எனவே ஒரு தம்பிடி பைசா இல்லாத பிச்சைக்காரனும் சரி அல்லது ஒரு நாளுக்கு போட்ட சட்டையை அடுத்த நாள் போடாமல் தூர எறியும் பணக்காரனாயிருப்பினும் சரி, எல்லோருமே ஏதாவது ஒன்றை பிச்சை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் பிச்சை போடுவது கடவுளா அல்லது வினைப்பயன்களா என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

இந்த உலகம், ஒருவர் இன்னொருவரை ஏதோ ஒரு விதத்திலோ அல்லது பலவிதத்திலோ சார்ந்த உலகமாகத்தான் இருக்கிறது. மொத்தத்தில், நாம் அனைவருமே பிச்சை எடுத்தாலும் எடுக்காவிட்டாலும் பிச்சை எடுக்கும் பாமர அல்லது படித்த பிச்சைக்காரர்களே!

# கடவுச்சீட்டு மோசடி 18 பேர் கைது




கொழும்பு, நவ. 20

கடவுச்சீட்டு பெற்றுக் கொள்ள முயற்சித்த 13 பெண்களும் 05 ஆண்களும் நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளர். குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள பொலிஸ் சோதனைச்சாவடி அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்காக போலி இலக்கங்கள் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரைகள் கொண்ட ஆவணங்களை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு சமர்ப்பித்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாடு செல்வதற்குத் தேவையான கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கு போலியான ஆவணங்களுடன் திணைக்கள வளாகத்தில் தங்கியிருந்த 18 பேர் ஏதேச்சையாக சோதனையிடப்பட்டு கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கடவுச்சீட்டு பெறுவதற்காக திணைக்களத்திற்கு வரும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிப்பவர்கள் அனைவரும் உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் ஆவணங்களில் இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இந்த குழுவினர் அந்த இலக்கங்களை நுட்பமாக மாற்றியமைத்து போலியாக ஆவணங்கள் தயாரித்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய படிவத்தின் மேல் எழுதப்பட்ட மேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் கயங்க மாரப்பனவின் உத்தியோகபூர்வ முத்திரையும் போலியாக உருவாக்கப்பட்டு முத்திரையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின் போது சந்தேகநபர்களுக்கு யாரால் இந்த போலி ஆவணங்களை தயாரித்து கொடுக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை எனவும், மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர்கள் மிரிஹான தலைமையக பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் விசேட மோசடி விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை இரத்து செய்ய யோசனை

கொழும்பு, நவ. 20

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சகல சிறப்புரிமைகளையும் ரத்து செய்ய யோசனை முன்வைக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

புதிய நாடாளுமன்றில் தனிப்பட்ட பிரேரணையாக தாம் இந்த யோசனையை முன்வைக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் காலை மற்றும் பகலுணவு முழுமையாக நிறுத்தப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளங்கள் ரத்து செய்யப்பட்டு இந்த சேவையை ஓர் கௌரவ சேவையாக அறிவிக்க வேண்டுமென தெரிவிததுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டியில் வழங்கப்படும் 10 மில்லியன் ரூபா கடன் இனி வழங்கப்பட கூடாது என கோரியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் பாதுகாப்பு நீக்கப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

அமைச்சர்களுக்கு கொழும்பில் வீடுகள் வழங்கினால் வாடகை அடிப்படையில் வழங்க வேண்டும் எனவும் அந்த வாடகைத் தொகை மஹாபொல புலமைப்பரிசில் நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்துள்ளார்.

காரியாலயங்களுக்காக வழங்கப்பட்ட ஒரு லட்சம் ஷரூபா தேவையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாதிவெல பகுதியில் காணப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்புக்களை பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதிகளாக மாற்றப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதி தொகையையும் ரத்து செய்ய வேண்டுமென கோரியுள்ளார். (ஐ)



# யாழ். ஊடக அமையத்துக்கு சீனத் தூதுவர் குழு விஜயம்

இலங்கைக்கான சீன நாட்டுத் தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழுவினர் யாழ். ஊடக அமையத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த விஜயமானது நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். ஊடக அமையத்தின் போசகர் இ.தயாபரன், தலைவர் கு.செல்வக்குமார் உள்ளிட்டோர் தூதுவரை வரவேற்று கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில், யாழ்ப்பாணத்தில் பணியாற்றும்ஊடகவியலாளர்கள்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், அண்மையில்நடைபெற்றநாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்ச் சமூகம் ஒரு சரியான முடிவை எடுத்திருக்கின்றது என்றே நான் நம்புகின்றேன்.

அந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றிருப்பதானது தமிழ் மக்கள் பரந்த சிந்தனையோடு விடயங்களை இப்போது நோக்க ஆரம்பித்திருக்கின்றார்கள் என்றே தோன்றுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு வந்ததுள்ளமை மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. அதிலும் அனைவரும் எதிர்பார்க்கின்ற ஊடக அமையத்துக்கு வந்துள்ளமை மேலும் சந்தோசமாக உள்ளது.

வடக்குமாகாணத்தில்வாழுகின்றஎங்களுடைய சகோதர – சகோரிகளின் வாழ்க்கை முறை எவ்வாறு இருக்கின்றது, இங்கு அவர்கள் எவ்வாறு வாழ்கின்றார்கள், இந்த வாழ்க்கையை எவ்வாறு கொண்டு செல்கின்றார்கள் என்பவற்றை அறிந்துகொள்வதே எமது இந்தப் பயணத்தின் நோக்கமாக உள்ளது.



இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மிகப்பெரிய அளவில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளது. அதுவும் தெற்கை மையப்படுத்திய ஒரு தேசியக் கட்சிக்கு யாழ்ப்பாணத்திலும் மிகப் பெரும்பான்மையாக ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

நான் இன்று பருத்தித்துறைக்குச் சென்றிருந்தேன். அங்கு ஆங்கிலத்தில் எழுதப்பட்டு இருந்த ஒரு வாக்கியத்தைப் பார்த்தேன். அதாவது பன்மைத்துவத்தில் ஒற்றுமை என்று இருந்தது. உண்மையில் அந்த வாக்கியம் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சரியாவே பிரதிபலித்துள்ளது.

தற்போது இவையெல்லாம் யாழ்ப்பாணத்தில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதையே காட்டுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பத்தில்நான் இங்கு விஜயம்செய்வதுமிகவும் அர்த்தம்உள்ள ஒன்றாகவே கருதுகின்றேன். நான் வடக்கு மாகாணத்துக்கு முதல் தடவையாகக் கொவிட் கால கட்டத்திலேயே வந்திருந்தேன்.

அந்தக் கால கட்டத்திலேதான் சினோபாம் கொவிட் தடுப்பூசிகளை சீன அரசு இலங்கைக்கு வழங்கி இருந்தது. அப்போது சினோபாம் என்ற எமது தடுப்பூசிகளை வடக்கு, கிழக்கு முழுவதும் முழுமையாகப் பாவிக்க வேண்டும் என்று இலங்கை அரசிடம் சீன அரசு வலியுறுத்திக் கூறியிருந்தது.

இவ்வாறு நாம் வலியுறுத்திக் கூறியதாலேயே இங்குள்ள மக்களுக்கும் அந்தத் தடுப்பூசிகள் பாவிக்கப்பட்டன. இவ்வாறு வடக்கு, கிழக்கிலுள்ள எங்களுடைய சகோதர – சகோதரிகளுக்கு நாம் தடுப்பூசிகளை வழங்கியதைத் தொடர்ந்து இங்குள்ளவர்களுக்கு எங்களுடைய பல்வேறு உதவிகளைச் செய்தோம்.

அதனடிப்படையில் வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கினோம். அதேபோன்று ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளையும், கடற்றொழில் உபகரணங்களையும் வழங்கினோம்.

அந்த ஆண்டின் முதல் அரைநாண்டு காலத்தில் சீன அரசால் பல மில்லியன் ஷரூபா பெறுமதியான உதவிகளை வடக்கு மாகாணத்துக்கு மட்டும் வழங்கியிருக்கின்றோம்.

இதற்கமைய வீட்டுத் திட்டம், அரிசி, மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றை வழங்கினோம். இவற்றில் அரிசியை முழுமையாக வழங்கியுள்ளோம். ஆனாலும், வீட்டுத் திட்டம் மற்றும் மீன்பிடி உபகரணங்களை இப்போதும் வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.


சீன அரசு வழங்கிய உதவிகளின் பட்டியல் இலங்கை அரசால் தயாரிக்கப்பட்டவைதான். அந்தப் பட்டியலுக்கமைய எமது உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. சீனாவினுடைய நீண்டகால நண்பனாக இலங்கை இருக்கின்றது.” என்றார்.



# அமெரிக்காவுக்கு எதிராக விளாடிமிர் புட்டினின் உத்தரவு

# தீவிரநிலையில் போர்க்களம்





உக்ரைன் போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த அனுமதிக்கும் உத்தரவில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கையெழுத்திட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் ஒப்புதலுடன் ரஷ்யாவின் மீது உக்ரைன் நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்தி தாக்குதல் நடத்தியதையடுத்தே புட்டினின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதல் ரஷ்யாவின் எல்லைப் பகுதியில் மேற்கத்திய நாடுகள்வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்தி நடத்தப்பட்டுள்ளது.

இது ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையேயான மோதலில் தீவிரநிலையை தோற்றுவித்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இடையிலான போர் ஆரம்பமானது. இந்தப்போரில், முதலில் ரஷ்யா வெற்றி பெறும் என்பது போலத் தெரிந்தாலும், உக்ரைனின் எதிர்த் தாக்குதல்கள் யுத்தக்கள நிலைமையை மாற்றி விட்டன.

ரஷ்யாவைச் சமாளிக்க உக்ரைனுக்கு உலக நாடுகள் உதவின. குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்தும் ஆயுதங்களை வழங்கி வருகின்றன.

இந்தநிலையில், அமெரிக்கா, ஆயுதங்களை வழங்கினாலும், அவற்றை தமது விருப்பப்படி, உக்ரைனால் பயன்படுத்த முடியவில்லை.

ரஷ்யத் தாக்குதல்களுக்கு எதிராக தங்களைத் தற்காத்துக் கொள்ள மட்டுமே, அமெரிக்க ஆயுதங்களை உக்ரைன் பயன்படுத்தி வந்தது. எனினும், கடந்த சில நாட்களுக்கு முன்னர், தனது நீண்ட தூர ஏவுகணைகளை, ரஸ்யாவுக்கு எதிராக பயன்படுத்த உக்ரைனுக்கு அமெரிக்கா அனுமதி அளித்தது.

இதனையடுத்து, உக்ரைனும் தூர ஏவுகனைகளை கொண்டு தாக்குதல்களை ஆரம்பித்த நிலையிலேயே புட்டினின், அணு ஆயுத செய்தி வெளியாகியுள்ளது.

குறிப்பாக, தமது ஏவுகணைகளைக் கொண்டு ரஷ்யாவின் உட்பகுதிகளுக்கும் கூட சென்று தாக்குதல் நடத்த அமெரிக்கா, உக்ரைனுக்கு அனுமதி அளித்துள்ளது.

இது, தமது தேசியப் பாதுகாப்பிற்குப் பிரச்சினையை ஏற்படுத்துவதால், தமது நாடு, எதிர் நடவடிக்கையை எடுத்துள்ளதாக ரஷ்ய பேச்சாளர் ஒருவர் அறி வித்துள்ளார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



மாலைக்கதிர்
Maalaikkathir



# பொலிஸ் அரசியலுக்கு முடிவு அமைச்சரின் உறுதிமொழி



கொழும்பு, நவ. 20

பொலிஸ் அரசியல் மயமாக்கலுக்கு முடிவு கட்டுவதற்கு, இலங்கையின் புதிய பொது பாதுகாப்பு அமைச்சர் உறுதி யளித்துள்ளதுடன், இலஞ்சம் மற்றும் ஊழலைக் கட்டுப்படுத்துவ தற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

பொலிஸின் சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்கு தாம் அர்ப்பணிப்பு டன் இருப்பதாகவும் புதிய பொது பாதுகாப்பு மற்றும்நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜயபால செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். முந்தைய அரசாங்கங்களின் கீழ் பொலிஸ்துறை அரசியல் மயமாக்கப்பட்டதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை பொலிஸாரை அரசியல் செல்வாக்கிலிருந்து விடுவிக்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஏற்கனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இந்தநிலையில், இலங்கை பொலிஸார் பக்கச்சார்பற்ற, நியாயமான மற்றும் பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறும் வகையில்செயற்படுவதை உறுதிசெய்வதில் தனது உறுதியான நிலைப்பாட்டை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

(ஐ)







## இலங்கைக்கு கடனுதவி அங்கீகரித்துள்ள ஆசிய வங்கி




கொழும்பு, நவ. 20

இலங்கை அரசாங்கத்தின் நிதித்துறையை மேலும் வலுப்படுத்த உதவுவதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் கொள்கை அடிப்படையிலான கடனை, தாம் அங்கீகரித்துள்ளதாக, ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

பொருளாதார நிலைமைகளை உறுதிப்படுத்துவதிலும் நிதி நிலைமையை மேம்படுத்துவதிலும் இலங்கை நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்தநிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கி, தனது நிதித்துறையில் கட்டமைப்பு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி நிறுவனமயமாக்குவதன் மூலம் நாட்டை நீண்டகால வளர்ச்சியை நிலைநிறுத்த உதவுகிறது என்று வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டக்காபியூமி கடொனொ தெரிவித்துள்ளார்.

இந்த துணை கடன் திட்டம், பொருளாதார நெருக்கடி, பின்னடைவு மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றிலிருந்து நிலையான மீட்சியை அடைவதற்கு வங்கித் துறையின் நிர்வாகத்தை வலுப்படுத்தும்.

அத்துடன், இலங்கையில் நிதி உள்ளடக்கத்தை விரிவுபடுத்தவும் உதவும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

(ஐ)

## யாழில் இடம்பெற்ற விபத்தில் மூவர் படுகாயம்





யாழ்ப்பாணம, நவ. 20

யாழ்ப்பாணம் உப்புவேலி சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

யாழில் இருந்து நெல்லியடி நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியும், நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வானும் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவரும் வானில் பயணித்த ஒருவரும் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.11.2024 இல் வெளியிடப்பெற்றது.